உலக நாடுகள் வரிசை—8.

# வத்திக்காரன்

'சோமலெ'

பாரி நிலையம்
59, பிராட்வே · சென்னை 1.

முதற் பதிப்பு: அக்டோபர், 1960
உரிமை ஆசிரியர்க்கே.

விலை 50 காசு

Library Classification
Dewey Decimal No. 914-56

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை—14.

வரியும் படையும் இல்லாத வத்திக்கான் உலகிலேயே மிகச் சிறிய நாடு. இதன் தலைவரான போப் ஆண்டவரே உலகெங்குமுள்ள கத்தோலிக்கரின் மதத் தலைவர். பழமையின் சின்னமாகிய மதத்தைப் பரப்பும் வத்திக்கானில் புதுமையின் ஒளியாக உள்ள விஞ்ஞானமும் வளர்கிறது; பல்வேறு துறைகளில் நல்லறிவு தரவல்ல ஆராய்ச்சிகள், உயர வழிவகை செய்கின்றனர். உலகிலேயே பெரிய கிறித்தவக் கோயிலும் உலகிலேயே பெரிய மாளிகையான போப் ஆண்டவரின் அரண்மனையும் பிற கவினுறு மாளிகைகளும் வேறு எங்கும் காணற்கரிய கலைப் பொருள்களும் இச் சிறு நகரில் உள்ளன. வத்திக்கானின் அரசியல் உரிமைகளையும் இங்கு நிகழும் சடங்குகளையும்பற்றி இந்நூல் விவரமாகக் கூறுகிறது.

குறிப்பு:—வாடிகன் என்பதே தமிழ் ஒலிமுறைப்படி வத்திக்கான் ஆயிற்று.

# BIBLIOGRAPHICAL DATA


| | |
|---|---|
| Author's Name: | S. M. L. Lakshmanan Chettiar, Somalay, pseud. |
| Title: | VATICAN<br>Vol. 8 in a series of books on 'Countries of the World' |
| Language | Tamil |
| Edition: | First Edition |
| Place of Publication: | Madras |
| Publisher's Name and Address: | PAARI NILAYAM<br>59, Broadway, Madras-1 |
| Price: | 50 nP. |
| Year of Publication: | November 1960 |
| Pagination: | 47 |
| Size of the book: | 18·3 cm |
| Library Classification: | Dewey Decimal No. 914.56 |
| Brief Indication of Contents: | The book gives basic information about the Vatican State. Illustrations of points of tourist interest and a photo of Pope John XXIII are included. The book is intended for Catholics and non-Catholics alike. |

The Author desires to thank :

1. His Excellency The Apostolic Nuncio at New Delhi
2. The Auxiliary Bishop of Mylapore
3. Rev. Fr. L. D. Murphy, S.J.
4. The Principal, Loyola College, Madras
5. The Librarian, Loyola College and
6. Dr. M. Arokiaswami, Dept. of Indian History, University of Madras.

for making available to him access to sources of information and for clarifying several points by answering his questions.



போப் ஆண்டவர்

**23-ஆவது ஜான் (பி. 1882)**

இவர் 263-ஆவது போப் ஆண்டவராக
4—11—1958-இல் முடிசூட்டப் பெற்றார்.

யான் அறிந்த முதல் கத்தோலிக்கரும்
30 ஆண்டுகளுக்குமுன் எனக்கு அறிவுபுகட்டிய நல்லாசிரியரும்
என் தந்தையின் நண்பரும்
மதுரை, தூய மரியன்னை உயர்நிலைப்பள்ளி ஆசிரியருமாகிய
**சமயநல்லூர் ஆர். சவரிமுத்து அவர்களுக்கு**
இந்நூல்
என் அன்புக் காணிக்கை

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | 9 |
| 2. | சுதந்தர நாடு | 11 |
| 3. | கத்தோலிக்கத்தின் வரலாறு | 17 |
| 4. | இந்தியாவில் கத்தோலிக்கம் | 20 |
| 5. | போப்பைக் காணுதல் | 25 |
| 6. | போப் ஆண்டவரின் அலுவல்கள் | 27 |
| 7. | சடங்குகள் | 28 |
| 8. | வத்திக்கான் அரண்மனை | 31 |
| 9. | செயின்ட் பீட்டர்ஸ் சர்ச் | 33 |
| 10. | வத்திக்கான் நகர் | 35 |
| 11. | பிற நிறுவனங்கள் | 37 |
| 12. | கலைச் செல்வங்கள் | 45 |

# 1. முன்னுரை

தமிழ்நாடு வரலாற்றுக்கு முந்திய வளமையும் தொன்மையும் உடையது என்பதைப்பற்றி நாம் பெருமைப்படுகிறோம். 'உங்களுடைய பழமைக்கு என்ன ஆதாரம்?' என்று யாராவது கேட்டால், 'ரோம் நாட்டை ஆண்ட சக்கரவர்த்திகளுடைய நாணயங்கள், எங்கள் நாட்டிலே பல இடங்களில் மண்ணைத் தோண்டும்போது கிடைக்கின்றன. அந்த நாட்டினரோடு எங்கள் முன்னோர்கள் வாணிபம் செய்தனர்' என்று தலை நிமிர்ந்து, நெஞ்சை உயர்த்தித் தைரியமாகச் சொல்லுகிறோம். இந்தச் சிறப்புக்குரிய ரோமாபுரி இன்றைய இத்தாலியின் தலைநகரம். இந்த ரோமாபுரி நகரைப் பற்றி இதுவரை இரண்டரை லட்சம் பேர் நூல்கள் எழுதியிருக்கிறார்கள் என்பதிலிருந்து இதன் பெருமையை அறியலாம்.

இத்தாலி, ஐரோப்பிய நாகரிகத்தின் ஆணிவேர்; ஐரோப்பியர் அருமையாகப் பேணும் கவின்கலைகளின் இருப்பிடம். அந்த நாட்டிற்குள்ளேயே மற்றொரு சுதந்தர

நாடும் இருக்கிறது. அதுதான் உலகத்திலேயே சிறிய நாடான வத்திக்கான். அதன் மொத்தப் பரப்பு 108 ஏக்கர், அதாவது சென்னை அரசாங்க அலுவலகங்களுள்ள கோட்டையின் பரப்பளவைவிடக் குறைவு; சிதம்பரம் நடராசர் கோயிலின் பரப்பு 40 ஏக்கர் என்பதிலிருந்து வத்திக்கானின் அளவை ஒப்பிட்டு உணரலாம்.

உருவம் கண்டு எள்ளாமை வேண்டும் என்பது வள்ளுவர் வாக்கு. வத்திக்கானின் பரப்பு சிறியதாக இருந்தாலும் அதன் புகழ் பெரிது. அதன் செல்வாக்கு ஆழிசூழ் உலகமெங்கும் பரவியிருக்கிறது. 50 கோடி கத்தோலிக்கர்—இந்தியாவின் மக்கள் தொகையைவிடக் கூடுதலானவர்—வத்திக்கானைப் புனித நகரமாகக் கருதி வழிபடுகின்றனர்.

ரோமாபுரியின் காட்சிகளை அயல் நாட்டாருக்குக் காட்டுவதற்கு முக்கியமான உணவு விடுதிகளிலிருந்து நாள்தோறும் ஒவ்வொரு இரண்டு மணி நேரத்துக்கு ஒரு முறையும் பல வாகனங்கள் புறப்படுகின்றன. விளக்கம் கூறி, காணத்தக்க இடங்களுக்கு நம்மை அழைத்துச் செல்லுவதே தொழிலாக ஓராயிரம் பேர் உள்ளனர். ரோமாபுரியின் ஏனைய காட்சிகளைக் காட்டி முடித்து, இறுதியாகத்தான் வத்திக்கானைக் காட்டுவர். முதலிலேயே வத்திக்கானைப் பார்த்துவிட்டால், பார்ப்பவர்களுக்குப் பிற இடங்களில் ஆர்வம் குன்றிவிடும். பொதுக்கூட்டங்களிலும் சிறந்த பேச்சாளரைக் கடைசியில்தானே பேசச் சொல்லுகிறார்கள் ?

## 2. சுதந்தர நாடு

வத்திக்கான் ஒரு சுதந்தர நாடு. சுதந்தர நாடு என்றால் என்ன? மற்றொரு சுதந்தர நாட்டால் எல்லாப் பக்கங்களிலும் சூழப்பெற்றிருக்கும்போது வத்திக்கான் எப்படிச் சுதந்தரமாக இருக்கிறது?

'படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும் உடையான் அரசு' என்பது வள்ளுவர் குறள்.

### படை

வத்திக்கானுக்குப் படை கிடையாது. அது அங்கே தேவைப்படவும் இல்லை. காவல்பணி புரியும் போர்வீரர் சுவிட்சர்லந்து நாட்டினரால் வத்திக்கானுக்கு கி. பி. 1505 முதல் அனுப்பப்படுகின்றனர். இவர்களின் எண்ணிக்கை 100. இவர்கள் கத்தோலிக்க மதத்தினராகவும் 19 வயதுக்குக் குறையாமலும் 25 வயதுக்கு மேற்படாதவராகவும் திருமணமாகாதவராகவும் இருக்க வேண்டும். தங்கள் நாட்டிலேயே முதலில் போர்ப்படையில் அனுபவம் பெற்றவராக இருக்கவேண்டும் என்ற நியதியும் உண்டு. ஆபத்துக் காலத்தில் போப் ஆண்டவரைக் காப்பாற்றும் பெரும் பொறுப்பு இவர்களுக்கு உண்டு.

சொந்தமாகப் போலீசுப் படை மட்டும் வத்திக்கானில் உண்டு.

### குடி

வத்திக்கானில் 1,000பேர் குடியிருக்கின்றனர். ஆனால் இவர்களையன்றி உலகெங்குமுள்ள 50 கோடிக் கத்தோலிக்கர் வெவ்வேறு நாடுகளின் குடிமக்களாக இருந்தாலும் ஆத்மீகத் துறையிலும் அன்றாட வாழ்விலும் போப் ஆண்டவருக்குக் கட்டுப்பட்டே நடந்து வருகின்றனர்.

கூழ்

எல்லா அரசாங்கங்களேயும் போலவே போப் ஆண்டவருக்கும் அங்கு வேலே பார்க்கும் 5,000 பேருக்குச் சம்பளம்—ஓராண்டுக்கு மூன்றரைக் கோடி ரூபாய்—கொடுக்கிருர். இப்படி போப் ஆண்டவருக்கு எவ்வளவோ செலவுகள் இருக்கின்றன. இவ்வளவு பணமும் எங்கிருந்து வருகிறது ?

உலகெங்கும் உள்ள கத்தோலிக்கர்கள் தங்களுடைய புனித நகரமாகிய வத்திக்கானின் நடைமுறைச் செலவுக்காக நன்கொடை அனுப்தகின்றனர். இதற்கு, பீட்டர்ஸ் பென்ஸ் என்று பெயர். இது சிறுசிறு சிறு தொகைகளாக ஆண்டுக் கொருமுறை கோவில்களில் உண்டியல் பணமாக வசூலிக்கப்படுகிறது.

மிகப் பெரிய செல்வர்கள் தாங்கள் இறக்கும் முன்னர் எழுதும் உயிலில் ஒரு தொகையை இந்தப் புனித நகருக்காக ஒதுக்குகின்றனர்.

1929-இல் இத்தாலிக்கும் வத்திக்கானுக்கும் ஏற்பட்ட உடன்பாட்டின்படி 20 கோடி ரூபாய் ரொக்கப் பணமும் 26 கோடி ரூபாய் அரசாங்கப் பத்திரமாகவும், இத்தாலி 1870-இல் எடுத்துக்கொண்ட பகுதிகளுக்கு நஷ்ட ஈடாக போப்புக்கு கொடுத்தது. இந்த மூலதனங்களிலிருந்து கிடைக்கும் வருவாயே வத்திக்கானின் முக்கியமான செல்வம்.

பொருட்காட்சி மண்டபங்கள், அஞ்சல் நிலேயம், கலேப் பொருள்கள் செய்து விற்றல் ஆகியவற்றின் மூலமும் வத்திக்கானுக்கு வரும்படி கிடைக்கிறது. இவ்வாறு கிடை-க்கும் வருவாயை வைத்துப் போப் ஆண்டவர் உலகெங்கும் உள்ள கத்தோலிக்க நிறுவனங்களுக்குப்

பணம் கொடுக்கிருர். கம்யூனிஸ்ட் நாடுகளில் அல்லற் படுகின்ற பாதிரிமார்களுக்குப் பொருளுதவி செய்கிருர்.

### அமைச்சு

வத்திக்கான் ஆட்சியை நடத்தவும் கத்தோலிக்கச் சமயத்தைப் பேணவும் போப் ஆண்டவர் ஓர் அமைச்சரவை நியமித்துக் கொள்கிருர். இந்த அவைக்கு 'காலேஜ் ஆப் கார்டினல்ஸ்' என்று பெயர்.

அமைச்சர் அவையில் உறுப்பினர் தொகை இவ்வளவு என்ற வரையறை எந்த நாட்டிலும் இல்லை. அவ்வாறே, இந்த அவையிலும் போப் ஆண்டவர் தம் விருப்பம்போல எத்துணைப் பேரையும் நியமித்துக் கொள்ளலாம். இப்போது இந்த அவையில் 79 பேர் உள்ளனர். முன்னர் ஒரு காலத்திலும் இவ்வளவு கார்டினல்கள் இருந்ததில்லை. முன்பு இத்தாலியர் மட்டுமே கார்டினலாக இருந்தனர். கடந்த 30 ஆண்டுகளாக ஏனைய நாட்டினர் சிலரும் கார்டினலாக்கப்பட்டுள்ளனர். பம்பாயின் ஆர்ச் பிஷப்பாகிய கார்டினல் வலேரியான் கிரேசியஸ் (பி. 1900) 1953 சூன் 12–இல் கார்டினலாகநியமனமாளுர்; இவர் கார்டினல் பதவி பெற்றுள்ள முதல் இந்தியரும் ஒரே இந்தியரும் ஆவார்.

அமைச்சர்களைப் போலவே கார்டினல்களுக்கும் சம்பளம் உண்டு. இப்போது நிலவிவரும் சம்பளம் மாதம் ரூபாய் மூவாயிரம் ஆகும்.

அமைச்சர்களைப் போலவே கார்டினல்களுக்கும் வேலைப் பொறுப்பு இலாகா அல்லது துறையாகப் பகுக்கப் படுகிறது. கார்டினல் கிரேசியசின் பொறுப்பு, கீழை நாடுகளிலுள்ள கத்தோலிக்கக் கோயில்களை மேற்பார்வையிடுதல்.

முதல் அமைச்சர், வெளிநாட்டமைச்சர் என்ற இரு பொறுப்புக்களையும் ஒரு கார்டினல் வகிக்கிறார். இவருக்கு Cardinal Secretary of State என்று பெயர். கார்டினல்களில் சிலர் வத்திக்கானிலும் ஏனையோர் பிற நாடுகளிலும் வாழ்கின்றனர். திருச்சபைக் கூட்டங்கள் நிகழும்போது கார்டினல்கள் எல்லோரும் வத்திக்கானுக்கு வருவார்கள். ஒரு தடவை கார்டினலாக நியமனமானால், வாழ்நாள் முழுவதும் அந்தப் பதவி அவருக்கு உண்டு. ஒரு போப் ஆண்டவர் இறந்த 15–ஆம் நாளில் இந்தச் சபை வத்திக்கானில் இரகசியக் கூட்டம் நடத்தும். அப்போது கூட்டம் நிகழும் மண்டபம் வெளி உலகிலிருந்து துண்டிக் கப்பட்டுவிடும். மூன்றில் இரண்டு பங்குப் பேரேனும் இரகசிய வாக்களிப்பில் ஆதரிக்கும் எந்தக் கத்தோலிக்க ஆடவனும்—சாதாரண மனிதராயினும் சரி; அவர் துறவி யாக இருக்கவேண்டும் என்ற கட்டாயமில்லை. (சாதாரண மானவர் எவரும் இதுவரை தேர்ந்தெடுக்கப்பட்டதில்லை ; அவ்வாறு போப்பாக வருபவர்கள் உடனே துறவியாகி, பிஷப் என்னும் பதவியும்பட்டமும் பெறவேண்டும்.)— போப்பாகத் தேர்ந்தெடுக்கப்படலாம். மாடியின் முற்றத்தி லிருந்து வெள்ளை நிற நறும் புகை போட்டு, தேர்தல் முடிவடைந்தது தெரிவிக்கப்படும்.

கார்டினல்களைக் கத்தோலிக்கத் திருச்சபையின் இளவரசர்கள் என்று கூறலாம். அறிவு, ஆற்றல், ஒழுக்கம், பணிவு, இறைப்பற்று, எளியோர்மாட்டு அன்பு—இத் தகுதிகளையுடையவர் என்று போப் ஆண்டவர் கருதும் எவரும் கார்டினல் ஆகிவிடலாம்.

வத்திக்கான் நகரின் நிர்வாகத்தைக் கவனிக்கஒரு குழு இருக்கிறது. இதற்கு Pontifical Commission என்று பெயர். இதன் தலைவர் வத்திக்கானின் கவர்னர் என்று அழைக்கப்படுகிறார்.

**நட்பு**

வத்திக்கான் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் உறுப்பினராகச் சேரவில்லை. ஆனாலும், அதன் உட்குழுக்களான உணவு விவசாய மன்றம், உலகச் சுகாதார நிறுவனம், கல்வி விஞ்ஞான கலாச்சாரக் குழு ஆகியவற்றில் வத்திக்கானின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு வருகின்றனர்.

இந்தியா உட்பட அறுபது நாடுகள் வத்திக்கானுடன் தூதுவர்களைப் பரிமாறிக் கொள்ளுகின்றன. அரசியல் காரணங்களுக்காக ரஷ்யா வத்திக்கானுடன் ராஜதந்திர உறவு வைத்துக் கொள்வதில்லை. 'படை இல்லாத நாட்டுடன் தூதுவர் உறவு கொள்வது வீண் செலவு' என்று ரஷ்யத் தலைவர் ஸ்டாலின் ஒரு முறை கூறினர். அமெரிக்காவில் பிராடெஸ்டண்டு-கத்தோலிக்கக் கருத்து வேறுபாடுகளால் அரசாங்கத் தூதுவருக்குப் பதிலாக அமெரிக்கக் குடியரசின் தலைவரின் சொந்தப் பிரதிநிதி என்ற பெயரில் ஒருவர் வத்திக்கானில் இருந்து வருகிறார்.

பௌத்த மதத் தலைவரான தலாய்லாமா திபேத் நாட்டின் ஆட்சித் தலைவராக இருப்பது போலவே போப் ஆண்டவரும் கத்தோலிக்க சமுதாயத்தின் வணக்கத்துக்குரிய புனிதத் தந்தையாகவும் வத்திக்கான் அரசாங்கத்தின் ஆட்சித் தலைவராகவும் இருந்துவருகிறார். தலாய்லாமாவுக்கும் சீனருக்கும் 1958–இல் கருத்து வேறுபாடு ஏற்பட்டதைப்போலவே 1870 முதல் 1929 வரை போப்புக்கும் இத்தாலிய அரசாங்கத்திற்கும் மனக் கசப்பு இருந்தது. அவர்களுக்கிடையே எந்தவிதமான உறவும் இல்லாதிருந்தது. 1929-இல்தான் ஒன்பதாவது பயஸ் என்ற போப் இத்தாலியச் சர்வாதிகாரியான முசோலினியுடன் ஓர் உடன்பாடு செய்துகொண்டார்.

இத்தாலிய அரசாங்கம் வத்திக்கானில் எந்தவிதமான வரியும் வசூலிக்க முடியாது. இத்தாலியச் சட்டங்கள் இங்கே செல்லாதன.

1929-இல் வத்திக்கான் ஒரு தனிநாடாக ஒப்புக் கொள்ளப்பட்டதிலிருந்து இத்தாலிய அரசாங்கம் எந்த விதத்திலும் வத்திக்கானின் உரிமையில் தலையிடுவதில்லை. வத்திக்கானுக்குத் தூது அனுப்பும் எல்லா நாடுகளின் தூதுவர்களும் தங்குவதற்கு வத்திக்கானில் இடமில்லாத தால் அவர்கள் இத்தாலி நாட்டு எல்லைக்குள் தங்கலாம் என்றும் அவ்வாறு தங்கும் தூதுவரின் நாடு இத்தாலிக்கு எதிரியான நாடாக இருந்தாலும்கூட, தாங்கள் எந்த விதத்திலும் இடையூறு செய்வதில்லையென்றும் இத்தாலியர் உறுதி கூறியிருக்கின்றனர்.

## அரண்

எவ்விதமான அரணும் இயற்கை எல்லைகளும் இல்லாதது வத்திக்கான். கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களில் 17 நூற்றுண்டுகளாக நல்லிடம் பெற்று அவர்களுக்கு அரணுக விளங்கும் போப் ஆண்டவர்க்கு அரண் எதற்கு?

போப்புக்கு என்று தனியாக ஒரு கொடி உண்டு. இது தங்க நிறமும் வெள்ளை நிறமும் உள்ள பட்டுத்துணியால் ஆனது.

போப் ஆண்டவர் நாணயங்களை ஆறும் நூற்றுண்டு முதல் அச்சிட்டு வருகிறுர்; 'லிரா' என்னும் இந்த நாணயம் இங்கு மட்டும் செல்லுபடியாகும். அதே நேரத்தில் உலகத்திலுள்ள எந்த நாட்டின் நாணயத்தையும் இங்கு ஏற்றுக்கொள்கின்றனர். அஞ்சல் முத்திரைகளை 1852 முதல் வெளியிடுகிறுர். இந்த அஞ்சல் தலைகளில் போப்

ஆண்டவரின் வடிவமும் கிறித்தவ சமயத்துக் கருத்துக்களைப் பரப்பும் படங்களும் கவர்ச்சியாகப் போடப்படுகின்றன. அஞ்சல் தலைகள் சேர்ப்பவர்கள் இவற்றை ஆர்வமுடன் வாங்குகின்றனர். சொந்தமாக வானொலி நிலையம் உண்டு. பாஸ்போர்ட்டுகளை வழங்குகிறார். வத்திக்கானுக்குள் செல்ல 'விசா' என்னும் இசைவுச் சீட்டு வாங்கவேண்டுவதில்லை. சுங்க வரிகளும் கிடையாது.

அரசியல் வாதிகளுக்குப் போப் ஆண்டவர் ஏனைய அரசர்களைப் போல, அல்லது குடியரசு நாடுகளின் தலைவர்களைப்போல ஓர் ஆட்சித் தலைவர்,* பொது மக்களுக்கு அவர் காட்சிப் பொருள், பாதிரிமார்களுக்கு அவர் வழிகாட்டி; அறிஞர்களுக்கு ஒரு பேரறிஞர்; மொழி நூலோர்க்கு அவர் ஒரு பன்மொழிப் புலவர்; ரோம் நகரத்துக் கத்தோலிக்கர்க்கு அவர் தங்களுடைய சொந்த 'பிஷப்'. உலகெங்குமுள்ள பிற கத்தோலிக்கர்களுக்கு அவர் அறிவொளி வீசும் பல்கலைச் செல்வர்; பேரருளாளர்; கலங்கரை விளக்கம்; பண்பாட்டு உருவினர்; புனிதத் தந்தை; வாழும் இயேசுநாதர்.

## 3. கத்தோலிக்கத்தின் வரலாறு

கிறித்தவம் உலகெங்கும் பரவியுள்ள மதம். வேறு சில மதங்களுக்குப் பின்னர் தோன்றியுங்கூட அவற்றைவிட வலுவுள்ளதாக இருந்து வருகிறது. ஹிந்துக்களில் சைவர் வைணவர் என்ற பிரிவுகளும், முஸ்லிம்களில் ஷியா, ஷியா அல்லாதார் என்ற பிரிவுகளும் இருப்பது போல, கிறித்தவர் கத்தோலிக்கர், பிராடஸ்டண்டு என்று இரு பெரும் பிரிவினராக உள்ளனர்.

* இதனால் அவரைப் 'போப் அரசர்' என்றும் கூறுவர்.

பிராடஸ்டண்டு இயக்கம் பழமைக் கிறித்தவத்தி லிருந்தும் பிரிந்து சென்று 400 ஆண்டுகளுக்குமுன் ஏற் பட்டது. அதனுள் பல பிரிவுகள் உள்ளன; அவற்றுக்குள் ஒற்றுமை காணும் முயற்சிகள் எதிர்பார்த்த அளவு பயன் தரவில்லை. பிராடஸ்டண்டுகளை நோக்க, கத்தோலிக்கர் ஆற்றல் மிக்கவர்; செயல் வீரர். காரணம், அவர்களுக் கிடையே உள்ள ஒற்றுமை, கட்டுப்பாடு, போப் ஆண்ட வரின் தலைமை.

பிரான்ஸ், இத்தாலி, அயர்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற பல நாடுகளில் கத்தோலிக்கரே பெரும் பான்மையான மக்களாக உள்ளனர். கனடாவில் அவர்கள் மிகச் செல்வாக்குள்ள பகுதியினராக இருக்கின்றனர்.

ஐக்கிய அமெரிக்காவின் பல மாநிலங்களில் அவர்கள் கணிசமான அளவினராக வாழ்கின்றனர்; 580 பத்திரிகை களைக் கத்தோலிக்கர் நடத்துகின்றனர்; அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனில் 1922-இல் வேலை தொடங்கப் பட்ட கத்தோலிக்கக் கோவில் 15 கோடி ரூபாய்ச் செலவில் 1962-இல் கட்டி முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1960 தேர்தலில் அமெரிக்கத் தலைவர் பதவிக்கு ஒரு கத்தோலிக்கர் போட்டியிடுகிறார்.

கத்தோலிக்கம் என்ற பெயர் ஈராயிரம் ஆண்டு களாகவே வழங்கி வந்திருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் கொள்கைகளைக்கொண்டு உருவானது கிறித்தவ மதம். இது ஐரோப்பாவெங்கும் பரவி எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதால் அப்பொருளில் 'கத்தோலிக்கம்' என்ற பெயரைப் பெற்றது.

இயேசுகிறிஸ்துவின் சீடர்களுள் முதன்மையான முனிவர் செயின்ட் பீட்டர் என்னும் தூய இராயப்பர் என்பார்; இவரே இயேசுவுக்குப்பின் கத்தோலிக்க மதத்

தலைவர் ஆனார். இவருக்கு இயேசுநாதர் பல வரங்களை வழங்கினார்; 'இவரும் இவர்க்குப் பின்வரும் போப் ஆண்டவர்களும் நேர்மையான மனத்தோடு கடவுளுக்கு ஊழியம் செய்கிறவர்கள். எவ்விதத் தவறையும் செய்ய மாட்டார்கள்' என்ற வரத்தை இயேசு கொடுத்தார் என்பர்.

தூய இராயப்பருக்குப் பிறகு லைனஸ் என்பார், மதத் தலைவர்—அல்லது திருச்சபையின் தலைவர் ஆனார். அது முதல், ஒருவர்பின் ஒருவராகப் போப் ஆண்டவராக இருந்து வருகின்றனர். தூய இராயப்பர் ரோம் நகரையே தலைமை இருப்பிடமாகக் கொண்டிருந்தார். அதனால் போப் ஆண்டவர்கள் அதையே தலைநகராக அமைத்துக்கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

போப் ஆண்டவர்களின் முயற்சியால் ஐரோப்பாவில் அரசர் பலர் கிறித்தவ மதத்தில் சேர்ந்தனர். எனினும் அரசாங்கத் தலையீடு பலவகையில் மதத்தைப் பாதித்தது. துறவுநிலை அடைந்தும் மடங்களை ஏற்படுத்தியும் கல்வி நிலையங்களைத் தொடங்கியும் மூன்றும் நூற்றாண்டு முதல் எட்டாம் நூற்றாண்டுவரை கத்தோலிக்கம் பரவிற்று. எட்டாம் நூற்றாண்டில் போப் ஆண்டவர்க்கு அரசியல் அதிகாரம் சிறிது சிறிதாக ஏற்பட்டது; புனித ரோமானிய சாம்ராஜ்யத்தின் அரசர்கள் போப் ஆண்டவர் கையால் முடி சூட்டிக்கொண்டனர். அந்த நிகழ்ச்சிக்குப் பின்னரே அரசியல் உலகில் போப் ஆண்டவர்கள் முக்கியத்துவம் பெற்றனர். புனித ரோமானிய சாம்ராஜ்யமே ஒரு காலத்தில் போப் ஆண்டவர்களுக்குக் கட்டுப்பட்டு இருந்தது. இந்த அரசின் எல்லைகள் காலப்போக்கில் சுருங்கி 1859-இல் 17,000 சதுர மைலாகக் குறைந்தன. பின்னர் 1870-இல் எஞ்சிய பகுதிகளையும் இத்தாலி எடுத்துக் கொண்டதால், வத்திக்கான் நாட்டின் பரப்பு இன்றைய அளவுக்கு வந்துவிட்டது.

# 4. இந்தியாவில் கத்தோலிக்கம்

1453-இல் மார்ட்டின் லூதர் போன்ற அறிவாளிகள் சிலர் மறுமலர்ச்சி இயக்கம் தொடங்கிப் பிராடஸ்டண்டு மதம் அமைத்தனர். இதை அடக்கவும் கத்தோலிக்க மதத்தைச் சீர்திருத்தவும் இயேசு சங்கம் (SOCIETY OF JESUS) தோன்றியது. இச் சங்கத்தினர், ஐரோப்பாவுக்கு வெளியே கத்தோலிக்க மதத்தைப் பரப்பினர்.

இவ்வாறு இயேசுவின் மதத்தைப் பரப்ப இந்தியாவுக்கு வந்த பாதிரிகளுள் தூய சவேரியார், ராபர்ட் டி நோபிலி என்ற தத்துவ போதக சுவாமிகள், தூய அருளானந்தர் என்ற டி பிரித்தோ, வீரமாமுனிவர் என்ற பெஸ்கி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இயேசுவின் சங்கத்தைச் சேர்ந்த பாதிரிகள்தான் இன்று கத்தோலிக்கத்துக்கு வலுவும் பெருமையும் தருகின்றனர்; உலகெங்கும் கடவுட் பணியோடு கல்விப் பணியும் புரிகின்றனர்; நூற்றுக் கணக்கான பல்கலைக் கழகங்களும், ஆயிரக்கணக்கான கல்லூரிகளும், பதினாயிரக் கணக்கான உயர்நிலைப் பள்ளிகளும் நூறாயிரக் கணக்கான தொடக்கப் பள்ளிகளும் நடத்தி வருகின்றனர். இப் பள்ளிகள் பெருநகரங்களிலோ அன்றி அமெரிக்கா போன்ற புதிய நாடுகளிலோ மட்டும் நிகழவில்லை. பரந்து பட்ட சின்னஞ்சிறு தீவுகளிலும், மக்கள் நடமாட்டம் மிகக் குறைவாக உள்ள சிற்றூர்களிலும், பழங்குடி மக்கள் வாழும் குறிஞ்சி நிலப்பகுதிகளிலும் நிகழ்கின்றன. இப் பணிகளைச் செய்யவும் மேற்பார்க்கவும் சிறந்ததோர் அமைப்பு இருந்து வருகிறது. அதன் தலைவரே போப் ஆண்டவர். அவர்க்கு அடுத்தபடியாக கார்டினல், ஆர்ச் பிஷப், பிஷப், ஆபட், பிரீஸ்ட், மான்சிக்னர், ரெக்டர், சுப்பீரியர் ஆகியோர் உள்ளனர்.

இயேசு சங்கத்தைத் தவிர, பிற சபைகளைச் சேர்ந்த குருக்களும் உள்ளனர். அவர்களின் அரும்பணிகளைப் பின்னர்க் கூறுவோம்.

நம் இந்திய நாட்டில் கி. பி. முதல் நூற்றுண்டில்—அதாவது கிறித்தவம் தோன்றி ஒரு நூறு ஆண்டுகளுக்குள்ளேயே—இந்தச் சமயம் பரவிவிட்டது இப்போது 55 லட்சம் கத்தோலிக்கர் இந்தியாவில் உள்ளனர்.* அதாவது நமது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 1,000 பேருக்குப் பதினைன்கு பேர் கத்தோலிக்கர். கத்தோலிக்கர் இந்தியாவில் 6,254 கல்வி நிலையங்களை நடத்துகின்றனர்; இவற்றில் 14 லட்சம் பேர் பயிலுகின்றனர். தொழிற்சாலை போன்ற பிற நிறுவனங்களின் (கத்தோலிக்கர் நடத்துபவை) எண்ணிக்கை 932.

இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்தபோதே, போப் ஆண்டவரின் பிரதிநிதி ஒருவர் புதுடெல்லியில் இருந்து வந்தார்; நாம் சுதந்திரம் பெற்ற பிறகு, போப் ஆண்டவரின் பிரதிநிதி அரசியல் அதிகாரமும் பெற்று தூதுவர் என்ற பதவிப் பெயருடன் இருந்து வருகிறுர். இத்தாலியிலுள்ள இந்தியத் தூதுவர், வத்திக்கானுக்கும் நமது தூதுவராகப் பணி புரிகிறுர்.

இந்தியக் கத்தோலிக்கர் இந்திய அரசாங்கத்தாரால் எவ்வாறு நடத்தப்படுகின்றனர் ? இந்தியாவில் அமலுக்கு வரும் புதுப்புதுச் சட்டங்கள் கத்தோலிக்கரை எவ்வாறு பாதிக்கின்றன ? என்பவற்றைக் கூர்ந்து கவனித்து இந்தியாவிலுள்ள வத்திக்கான் தூதுவர், அவ்வப்போது போப் ஆண்டவருக்குத் தெரிவித்து வருகிறுர். 'குடும்பக் கட்டுப்பாடு' செய்வதற்காக, கருவிலிருக்கும் குழந்தையின் உயிரைப் போக்குவது ஆண்டவனின் கருத்துக்கு மாறு

* இந்தியாவில் மொத்தம் 85 லட்சம் கிறிஸ்தவர் உள்ளனர்; ஏனைய 30 லட்சம் பேர் பிராடஸ்டண்டுகள்.

பட்டது என்றும், ஆண்-பெண் உறவைக் குறைத்துக் கொள்வதே அதனிலும் சிறந்த வழி என்றும் கத்தோலிக்கர் கருதுகின்றனர்; குடும்பக் கட்டுப்பாடு பற்றிய மருத்துவ சிகிச்சை செய்வதிலிருந்தும் கத்தோலிக்க டாக்டர்களுக்கு விதிவிலக்குத் தர வேண்டும் என்ற வேண்டுகோளுக்கு இந்திய அரசாங்கம் இணங்கியிருக்கிறது.

இந்தியர் சிலர் வத்திக்கானில் கல்வி பயின்று வருகின்றனர். ஒரு பாதிரியார், ரோமாபுரியிலுள்ள கிரகோரியன் பல்கலைக் கழகத்தில் இந்தியப் பண்பாட்டைப் பற்றிக் கற்பிக்கும் பேராசிரியராக இருந்து வருகிறார்.

இந்தியாவில் கோவா, கேரளம், தமிழ்நாடு ஆகிய மூன்று பகுதிகளிலுமே கத்தோலிக்கர் பெருந்தொகையாக உள்ளனர். 'டயாசிஸ்' என்னும் கத்தோலிக்க மாவட்டங்கள் தமிழ் நாட்டில் 12* உள்ளன. இவற்றுக்குக் கட்டுப்பட்ட கத்தோலிக்கர் தொகை ஏறத்தாழ 13 லட்சம்; அதாவது தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் $4\frac{1}{2}\%$; பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற தமிழரில் கத்தோலிக்கர் 15 %.

இந்தியாவிலேயே பழமையான கத்தோலிக்கக் கோயில் கோவாவில் இருக்கிறது; நம் நாட்டில் மிகப் பெரிய தேவாலயமும் அதுவே. தமிழ் நாட்டிலுள்ள கோயில்களுள் நாகையை அடுத்த வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதாகோயில், கடல்கடந்த நாடுகளிலும் புகழ் பெற்றிருக்கிறது.

கத்தோலிக்க மதத்தைப் பரப்பி அப்பணியிலேயே தூயதோமையார்§ சென்னைக்கருகேயுள்ள பறங்கிமலையில்‡

---

* மயிலாப்பூர், புதுச்சேரி, கும்பகோணம், தஞ்சை, திருச்சி, மதுரை, தூத்துக்குடி, கோட்டாறு, வேலூர், சேலம், கோவை, உதகமண்டலம்.

§ St. Thomas

‡ St. Thomas Mount

கி. பி. 52-ஆம் ஆண்டில் உயிர் நீத்தார் என்று சொல்லப் படுகிறது. எனவே, அதற்கு முன்னரே கத்தோலிக்கம் தமிழகத்தில் பரவியிருக்கவேண்டும். ரோமாபுரி மக்கள் தமிழ் நாட்டோடு முதல் நூற்றுண்டிலேயே வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்ற பெருமையோடு இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களில்ஒருவரான தூய தோமையார் அதே காலத்தில் தமிழ்நாட்டுக்கு வருகை புரிந்தார் என்ற பெருமையும் தமிழ்நாட்டுக்கு உண்டு.

16-ஆம் நூற்றுண்டுக்குப் பிறகுதான் கத்தோலிக்கரும் தமிழகத்தில் பெருகினர். 17-ஆம் நூற்றுண்டின் தொடக்க காலத்தைப் பற்றித் தமிழ்நாட்டு வரலாற்றை அறிய, கத்தோலிக்கப் பாதிரிமார் தங்களுக்குள் எழுதிக் கொண்ட கடிதங்களே துணையாக உள்ளன. கத்தோலிக்கப் பாதிரிமார்கள்—இந்தியாவிலும் சரி ஈழத்திலும் சரி— இயேசுவின் பணியுடன் இன்பத் தமிழுக்கு ஏற்றம் தந்திருக்கின்றனர்; தம் சமயத்துக் கோவில்களில் தமிழ் மொழிக்கு இந்துக் கோயில்களைவிடச் சிறப்பான இடம் தந்துள்ளனர்; தமிழில் அகராதிகளை அமைத்தும் அச்சு நூல்களை ஆக்கியும் அரும்பணி புரிந்துள்ளனர்; தேம் பாவணி இயற்றிய வீரமாமுனிவர் முதல் தமிழ்த் தூதுவரும் இன்றைய தனிநாயக அடிகள் வரை எண்ணற்ற பாதிரிகள் தளராது தமிழ்த் தொண்டு செய்து வருகின்றனர்.

வீரமாமுனிவர் இத்தாலியர்; 1711-இல் இந்தியாவுக்கு வந்தவர். இலத்தீன் மொழியிலும் போர்த்துகீசிய மொழியிலும் அவர் யாத்த தமிழ் இலக்கணங்களும் அகர வரிசை நூல்களும் பிற்காலத்தில் தமிழ் பயின்ற ஐரோப்பியர் அனைவர்க்கும் பயன்பட்டன.

அவர்க்குப் பின்னர், 19-ஆம் நூற்றாண்டில் இந்தியத் தமிழரான மயூரம் வேதநாயகம் பிள்ளையும், 20-ஆம் நூற்றாண்டில் இஸ்பானியரான ஹீராஸ் பாதிரியாரும் இலங்கைத் தமிழரான தனிநாயக அடிகளாரும் தலைசிறந்த தமிழ்த் தொண்டர்களாக உள்ளனர். வேறுபட்ட நாட்டினரான கத்தோலிக்கர் பலர் நம் மொழிக்குப் பணி புரிந்திருப்பது நமக்கு மகிழ்ச்சி தருகிறது.

இயேசு சங்கத்துப் பாதிரிகள் சிறந்த கல்லூரிகள் அமைத்து ஆற்றியுள்ள பணி நாமறிந்ததே. சென்னை நகரிலும் திருச்சியிலும் பாண்டி நாட்டிலும் இவர்கள் ப்ணி குறிப்பிடத்தக்கது.

இயேசு சங்கத்தைத் தவிர பிற சபைகளைச் சேர்ந்த குருக்களும் 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் நம்நாடு போந்து, கத்தோலிக்க மதத்தைப் பரப்பியுள்ளனர். அவர்களுள் போர்த்துகல் நாட்டிலிருந்து வந்த மிசனரிமார்கள், பிரான்சு நாட்டிலிருந்து வேத போதக சபையினர் (Foreign Missionaries of Paris) இருபதாம் நூற்றாண்டில் இத்தாலிய நாட்டிலிருந்து நம் நாட்டுக்கு வந்திருக்கும் சலேசியன் (Salesian) குருக்கள் ஆகியோர் குறிப்பிடத்தக்க அரும் பணிகள் செய்து வருகிறார்கள்.

சென்னை—மயிலை, தஞ்சை 'டயசிஸ்'களில் 17-ஆம் நூற்றாண்டிலிருந்து 1952 வரை கத்தோலிக்க மதத்தைப் பரப்பியும் ஏழை எளியோர்க்கு ஒல்லும்வகையால் உதவி யும் பணி புரிந்தவர்கள் போர்த்துக்கல் நாட்டுக் குருக்களே.

தமிழ் நாட்டில் மிகப்பெரிய கத்தோலிக்கக் கோயிலாக விளங்கும் சாந்தோம் தூய தோமையார் ஆலயம் அவர்களால் கட்டப்பட்டதே.

தென் ஆற்காடு, சேலம், கோவை, நீலகிரி, மைசூர் மாவட்டங்களில் கத்தோலிக்க மதத்தைப் பரப்பியவர்கள்

பிரெஞ்சுக் குருமார்கள். புகழ் பெற்ற அபே துபாய் (Abbe Dubois) இந்தக் குரு சபையைச் சேர்ந்தவரே.

வட ஆற்காடு, சென்னைப் பகுதிகளில் சலேசியன் குருக்கள் கைத்தொழில் நிறுவனங்களும் பள்ளிகளும் தாய் தந்தையரில்லாக் குழந்தைகளுக்காக விடுதிகளும் நடத்தி வருகின்றனர்.

## 5. போப்பைக் காணுதல்

போப்பைக் காணவேண்டுமென்று ரோமாபுரிக்குச் செல்லும் மக்கள் அனைவரும்—அன்றாடக் கூலி முதல் ஐசன்ஹோவர் வரை—விரும்புகின்றனர். நாள்தோறும் போப் ஆண்டவர் நிறைவேற்றும் கடமைகளுள் இவ்வாறு மக்களுக்குக் காட்சி தருவதும் ஒரு முக்கியமான அலுவல். இந்தப் பேட்டிகளுக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று வத்திக்கானிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர் அலுவலகங்களுக்கு அந்தந்த நாட்டுப் பெருமக்கள் எழுதுகின்றனர்.

பெருங்கூட்டமாக மக்கள் சில சமயங்களில் குழுமியிருப்பர். அப்போது, போப் ஆண்டவர் தன் அரண்மனையில் மாடியின் முற்றத்திலிருந்தவாறு பல்லாயிரம் பேருக்குக் காட்சி கொடுத்து, அவர்களை வாழ்த்துவார்.

மற்ற நாட்களில் செல்பவர், போப்பைக் காண்பதற்குப் பல சட்டதிட்டங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று ஆடவர் இன்ன உடை உடுத்தியிருக்கவேண்டும்; பெண்டிர் இன்ன உடை உடுத்தியிருக்கவேண்டும் என்பது. பெண்கள் கழுத்துவரை முற்றிலும் மூடிக்கொள்ளவேண்டும். அவர்களுடைய குதிகால்களும் தெரியாதபடி, அவற்றின் மீதுள்ள துணி தெருவைப் பெருக்கவேண்டும்,

போப்பைக் காண இசைவு பெற்றவர், நூல் நிலையத்துக்கு அருகேயுள்ள ஒரு மண்டபத்திற்கு முதலில் சென்று அங்குள்ள அலுவலரைக் காணவேண்டும். அவர் இன்னொரு அறைக்கு அழைத்து அங்குள்ள 'சேம்பர்லயின்' என்ற (மினுக்கும் உடை அணிந்த) அலுவலரிடம் நம்மை நிறுத்துவார். பின்னர், சிறிது நேரம் காத்திருக்க வேண்டும்.

காத்திருக்கும் வேளையில், கடிகாரங்களின் வகைகளையும், நவமணிகள் பதித்த மேசைகளையும், உலகெங்குமிருந்து போப் ஆண்டவர்க்கு வந்திருக்கும் அன்பளிப்புக்களையும் காணலாம்; எதிரே வரும் மக்கள் கூட்டத்தையும் பார்க்கலாம். அவர்கள் போப்பைப் பார்த்துவிட்டுத் திரும்புபவர்கள். அவர்களில்தான் எத்துணை வகையினர் உளர்? மணக்கோலத்தோடு மாதா கோவிலிலிருந்து புறப்பட்டுப் போப்பின் ஆசிபெற வந்திருக்கும் மணமக்கள் ; அமைச்சர்கள்; அரசகுடும்பத்தினர்; ஆசிரியர்கள்; இயேசு மதப் பாதிரிகள்; தூதுவர்கள்; ஊர் சுற்றிப்பார்ப்பவர்கள்; கம்யூனிஸ்ட்டு நாடுகளிலிருந்து தப்பி வந்தவர்கள்; உயிர் நீங்கும் நிலையில் போப்பின் அருள் பெற விழையும் நோயாளிகள். உள்ளே சென்றதும், தூய வெள்ளை உடை உடுத்தி, போப் காட்சி தருகிறார்.

கத்தோலிக்கர், போப் ஆண்டவர் முன்னால் மும்முறை மண்டியிட்டு, அவர் கை விரலிலுள்ள மோதிரத்தை முத்தமிட்டு வணக்கம் செலுத்துகின்றனர். அப்போது போப் எழுந்து நிற்பார். கத்தோலிக்கர் அல்லாதார், தலை குனிந்து மரியாதை தெரிவிக்கின்றனர்.

முக்கியமானவர்களை உட்காரச் சொல்லி, அவர்களுக்குப் போப் பேட்டி கொடுக்கிறார்.

## 6. போப் ஆண்டவரின் அலுவல்கள்

போப்பின் முக்கிய அலுவல் தமது சொந்தக் கோயிலில் நாள்தோறும் பல தடவை வழிபடுதல், உலகெங்குமிருந்து பக்தர்கள் அனுப்பும் பொருள்களைப் பூசையில் வைத்துப் பிறகு அவர்களுக்கு அவற்றைத் திருப்பியனுப்புவது, கடிதங்கள் போட்டவர்க்கு மறுமொழி அனுப்புதல், காண வந்திருப்பவர்களுக்குப் பேட்டி கொடுத்தல், பத்திரிகைகள் படித்தல், அலுவலக வேலைகளைக் கவனித்தல், வெளிநாடுகளில் உள்ள தூதுவர் அலுவலகங்களின் அறிக்கைகளைப் படித்து முடிவு செய்தல், எண்ணற்ற பதவிகளுக்குத் தக்க ஆட்களை நியமித்தல், தம்மிடம் கருத்துக் கேட்கவரும் அலுவலர்க்கு ஆணையிடுதல், கத்தோலிக்கரின் வாழ்க்கைக் கோட்பாடுகளை வகுத்தல், தோட்டங்களையும் வத்திக்கானிலுள்ள பிற சொத்துக்களையும் பேணுதல், அவசரமான செய்திகளை வெளிநாடுகளில் உள்ள தூதர்களுக்கு வத்திக்கான் வானொலி நிலையத்தின் வாயிலாக ஒலிபரப்புதல், முக்கியமான சொற்பொழிவுகளைத் தயாரித்தல் முதலியன.

இப்போது பதவியிலுள்ள போப் ஆண்டவராகிய 23—ஆவது ஜான், ரோமாபுரியிலுள்ள கைதிகளைக் கண்டு வாழ்த்துகிறார்; மருத்துவ நிலையங்களுக்குச் சென்று நோயாளிகளுக்கு ஆறுதல் கூறுகிறார்; கிறிஸ்துமஸ் நாளில் சிறுவர் சிறுமியர்க்கு அன்பளிப்புக்களை வழங்குகிறார்; பிராடஸ்டண்டு மதத்தினரோடு நல்லுறவு நிலவப் பாடுபடுகிறார்; யூதர்களுக்கும் கத்தோலிக்கர்க்கும் இடையேயுள்ள கருத்து வேறுபாடுகளை அகற்றி வருகிறார்.

புனித ஆண்டு என்று சில ஆண்டுகளைக் குறிப்பிடுவதும் உண்டு. அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதும் அந்த ஆண்டில் வருகை புரிபவர்க்கு வரம் கொடுப்பதும் போப் ஆண்டவரின் கடமை.

# 7. சடங்குகள்

வத்திக்கானில் பல சடங்குகள் நடைபெறுகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை: 1. போப் முடி சூட்டிக் கொண்டதன் ஆண்டு விழா. 2. இறந்த போப் நினைவாக நிகழும் பிரார்த்தனை. 3. கடந்த ஆண்டில் இறந்துபோன கார்டினல்களுக்கான வழிபாடுகள். 4. அர்ச். சிஷ்யப் பட்டத்திற்கு (Cononisation) உரியவர்களை முடிவு செய்யும் சடங்கு.

இச்சடங்குகள் யாவும் மிகப் பெருஞ் செலவில் நடைபெறுகின்றன. இவற்றின் கோலமும் அமைப்பும் மைசூர் தசராபோல இருக்கும் என்று சொல்லலாம்.

உரிய உடுப்புக்களை உடுத்திய காவலாளர் புடைசூழ, செங்கோல் தாங்கிய ஏவலாளர் நெஞ்சுயர்த்தி நிமிர்ந்து முன்செல்ல, கவினுறு வண்ணங்களில் ஆடை அணிந்த கார்டினல்கள் பின்னே மெல்லத் தலைகுனிந்து நடந்துவர இவ்வைபவங்களுக்குச் செயின்ட் பீட்டர்ஸ் சர்ச்சுக்குப் போப் ஆண்டவர் அடியேல் அடிவைத்து அன்ன நடை நடந்து வலம் வரும் காட்சியும் அப்போது அவரை அங்குள்ள கார்டினல் இன்முகத்துடன் வரவேற்று, விலை உயர்ந்த மும்முடியை போப் ஆண்டவர் தலைமீது பணிவுடனும் பயபக்தியுடனும் வைக்கும் காட்சியும் ஒப்புயர்வற்றவை.

அர்ச் சிஷ்யப் பட்டம் வழங்குவது அருமையாக நிகழும் ஒரு சடங்கு. இப்பட்டம் வழங்கப்பட்ட பிறகு, அவருடைய உருவச் சிலையை எந்தக் கத்தோலிக்க ஆலயத்திலும் வைத்து அவரை ஒரு சிறு தெய்வமாக வணங்கலாம்.


இறந்துபோன பெருமக்களுக்கு—சில சமயம் சில நூறு ஆண்டுகளுக்குப் பின்னரும்—இப்பட்டம் வழங்கப் படுகிறது. சிறப்புக்கு யாராவது ஒருவர் தகுதியானவர் என்று அவர் வாழ்ந்த பகுதியின் பிஷப் கருதினுல், அவர் ஆதாரங்கள் காட்டி அதைப் போப் ஆண்டவர்க்குத் தெரிவிக்கலாம். பின்னர், அதற்கென ஒரு குழுவைப் போப் ஆண்டவர் கூட்டுவார். அக்குழுவில், அன்னுருக்கு அர்ச் சிஷ்யப் பட்டம் தரலாம் அல்லது தரலாகாது என்பது பற்றிப் பல நாள் வாக்குவாதம் நடைபெறும். அப்போது கூறப்படும் கருத்துக்களைச் சமன்செய்து சீர்தூக்கி முடிவு செய்வர்.

இதுவரை, இப்பட்டம் ஓர் இந்தியருக்கு வழங்கப் பட்டிருக்கிறது. இவர் கன்சால்வா டி- கார்சியா (Gonsalva de Garcia) என்பார்; பம்பாய்க்கு அருகேயுள்ள பாசின் ஊரினர்; 1852-இல் இச்சிறப்புப் பெற்றவர்.

தமிழ் நாட்டிலுள்ள சைவ மடாலயங்களின் ஆதீன கர்த்தர்கள் பல்லக்கில் அமர்ந்து பட்டணப் பிரவேசம் செய்வது போலவே, போப் ஆண்டவரும் பல்லக்கில் அமர்ந்து செல்வார்.

போப் ஆண்டவர்க்குத் தேர் போன்ற கோச்சுகள் பதினுன்கு உள்ளன. அவற்றுள் தங்கமுலாம் பூசிய பகுதிகள் வெள்ளியினுலான படிக்கட்டுகள் ஆகியனவும் வழியில் செல்லும்போது ஏழை எளியோர்க்கு அன்பளிக்க உணவுப் பொட்டலங்கள் வைக்கப்படுவதற்கான இடமும் காணத்தக்கவை. குதிரை பூட்டி இந்தக் கோச்சுகளை 1770-ஆம் ஆண்டு வரை போப் ஆண்டவர்கள் பயன் படுத்தினர்கள். இப்பொழுது இவை காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருக்கின்றன.

போப் ஆண்டவர் பயன்படுத்துகிற கேடிலாக் காரின் பின் இருக்கையில் நடு இடத்தில் மிக அழகான நாற்காலி ஒன்று போடப்பட்டிருக்கிறது. அதிலேதான் போப் ஆண்டவர் உட்காருவார். அந்தப் பகுதி முழுவதும்



போப் ஆண்டவர், ஹிந்து மதத்து ஆதீனத் தலைவர்களைப் போலவே, தம்முடைய சீடர்களால் பல்லக்கில் தூக்கிச் செல்லப்படுகிறார்.

கண்ணாடியால் அடைக்கப்பட்டிருக்கும். போப் ஆண்டவர் கார் ஓட்டுபவரிடத்தில் ஏதாவது தெரிவிக்க வேண்டுமென்றால், அதற்கு ஒரு தனிக் கருவி இருக்கிறது; அதன் மூலமாகத்தான் தெரிவிக்க வேண்டும். பேசும் குழாய் Speaking Tube என்று அந்தக் கருவிக்குப் பெயர்.

போப் ஆண்டவருடன் நெருங்கிப் பழகுகிறவர்களாக-அவருடைய உள் வட்டம் என்று சொல்லத் தக்கவர்கள்-அவருக்கு இன்றியமையாத பணிகளைச் செய்யும் சிலரே. அவருக்குச் சமையல் செய்வது, அவருடைய அறைகளைப் பேணுவது, அவருக்கு உணவு படைப்பது, அவருடைய உடைகளைச் சலவை செய்வது, அவருடைய கடிதங்களை எழுதுவது ஆகியவற்றுக்குப் பல ஆட்கள் உள்ளனர். இவர்களைத் தவிர கார் ஓட்டுபவர்களும், பல்லக்குத் தூக்குபவர்களும், மருத்துவர்களும், தையற்காரர்களும், செருப்புத் தைப்பவரும் இருக்கிறார்கள்.

## 8. வத்திக்கான் அரண்மனை

வத்திக்கான் அரண்மனை எப்போது கட்டப்பட்டது என்று ஆதாரமாக ஒருவர்க்கும் தெரியவில்லை. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில், பேரரசர் சிலரால் அது கட்டப் பட்டிருக்க வேண்டும்.

இந்த அரண்மனை எவ்வளவு உறுதியாகக் கட்டப் பெற்றிருக்கிறது என்பது 'டெலிபோன்' கண்டுபிடித்த பிறகே தெரிந்ததாம். அரை அடிக் கனமுள்ள சுவர்களைக் கட்டும் அருமையான கலையை வளர்த்திருக்கும் 'காண்டிராக்ட்'காரர்களுக்கு வத்திக்கான் அரண்மனையின் சுவர்களின் கனம் 14 அடி என்பது நம்ப முடியாததாக இருக்கும்; ஆனால் அது உண்மை. அவற்றைத் துளைத்து, டெலிபோன் கம்பியைப் பொருத்துவது பெரிய பாடாக இருந்ததாம்!

இந்த அரண்மனை போப் ஆண்டவர் இருக்குமிடம் மட்டுமன்று. கிறித்தவ மதத்தைப் பற்றிய எல்லா வகையான அலுவல்கள் நடக்கும் இடமும் இதுவே ஆகும்.

அதோடு கலையும் விஞ்ஞானமும் வளர்வதற்கான பல நிகழ்ச்சிகள் நடைபெறும் மாளிகையும் இதுவே. ஒரு ஆராய்ச்சிக்கூடம் என்றும், பொருட்காட்சிச்சாலை என்றும் இந்த அரண்மனையைச் சொல்லலாம். ஆயிரக்கணக்கான தூண்களும் ஓராயிரம் அறைகளும் 100 இடங்களில் மாடிப்படிகளும் இதில் உள்ளன. 200 அறைகளில் போப் ஆண்டவரும் ஏனைய உயர் அலுவலர்களும் போப் ஆண்டவருடைய பணியாட்களும் வாழ்கின்றனர்.

இவற்றுள் குறிப்பிடத்தக்க அறை போப் ஆண்டவரின் தங்க இருக்கை (பொன்னுலான சிம்மாசனம்) உள்ள அறை. இந்த அறையையும் போப் ஆண்டவர் பயன் படுத்தும் — தங்கத்தாலான டெலிபோனையும் காணக் கொடுத்து வைக்கவேண்டும். படுக்கை அறையிலிருந்து எழுந்தவுடனே செயின்ட் பீட்டர் தேவாலயத்தைப் பார்த்து வணங்கும்படியாகப் படுக்கை அறையும் சன்னலும் கட்டப்பட்டுள்ளன.

போப் ஆண்டவர் குளிக்கும் அறை பலவகை யான இயந்திரக் கருவிகளையும் நீராடுவதற்கான அமைப் புக்களையும் உடையது. அங்குள்ள பொத்தான்களை அழுத்தினுல் அவை இயங்கும். மின்சார உதவி கொண்டு சவரம் செய்துகொள்ளும் கருவிகளைப் பல நாட்டினர் போப்புக்கு அன்பளித்திருக்கின்றனர். அவையும் அந்த நீராடும் அறையில் மக்களுக்குக் காட்சிப் பொருளாகவும் போப்புக்கும் பயன்படும் பொருளாகவும் உள்ளன.

வத்திக்கான் கட்டிடங்களைக் குளிர்காலத்தில் சூடாக்குவதற்காகச் சில அமைப்புக்கள் உள்ளன. இந்த அமைப்புக்களில் ஏதாவது குறைபாடுகள் ஏற்பட்டால்கூட போப் ஆண்டவர் இருக்கிற அறையைச் சூடாக்குவதற்குத் தனியான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.


# 9. செயின்ட் பீட்டர்ஸ் சர்ச்

இது உலகில் பெரிய கிறித்தவக் கோயில். இந்தக் கோயிலின் மேன்முகடு பொன் தகடுகள் பதித்து மெருகிடப்பட்டிருக்கிறது. வெளியிலிருந்து பார்க்கும்போது மேலே பளிங்கில் பதிக்கப் பெற்றுள்ள எழுத்துக்கள் நமக்கு நன்ருகத் தெரிவதற்காக அவை ஒவ்வொன்றும் மிகப் பெரிய வடிவத்தில், மேலே செல்லச் செல்ல ஒவ்வொரு எழுத்தின் அளவும் கீழே இருப்பதைவிட பெரியதாக அமைந்துள்ளன.

நெடுந்தொலைவிலிருந்து பார்த்தாலும் இந்தக் கோயிலின் சிகரம் நன்கு தெரியும்.

செயின்ட் பீட்டர்ஸ் சர்ச்சுக்குச் செல்லும்போது அதன் முன்னே இருக்கின்ற—மூன்று லட்சம் மக்கள் கூடுதற்கேற்ற—பெரிய முற்றம் பரவசமடையச் செய்கிறது. பல நூற்ருண்டுகளாக மாருத பழமையின் இருப்பிடத்தின் புனிதமானதென்று பல தலைமுறையினரால் பல நாட்டினரால் கருதப்படும் இந்த மண்ணிலிருந்து 463 அடி உயர்ந்த தளத்தில் பொன்னுலான சிலுவை இருக்கிறது. இந்தத் தேவாலயத்துக்குள் சிலுவை உள்ள இடத்தையும் இதன் அருகே போப் ஆண்டவர் இருப்பதற்காக உள்ள இருக்கையும் எல்லோர்க்கும் தெரியுமாறு மண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கே இருக்கும்போது வரலாற்று நிகழ்ச்சிகள் நம் உள்ளத்தில் தோன்றுகின்றன.

இந்தத் தேவாலயத்தைக் கட்டப் பல நூற்ருண்டுகள் ஆயிற்ரும். 43,000 பேர் இதனுள் மண்டியிட்டுத் வழிபடலாம் என்ருல் இதன் அளவும் பரப்பும் எத்தகையன? இறந்துபோன போப் ஆண்டவர்களின் சவங்கள் இங்கு



'செயின்ட் பீட்டர்ஸ் சர்ச்' எனப்படும் தூய இராயப்பர் தேவாலயம்.

இதுதான் உலகத்திலேயே பெரிய கத்தோலிக்கக் கோயில். இந்தக் கட்டிடத்தின் அமைப்பை முடிவு செய்தவர் மைக்கேல் ஏஞ்சலோ என்ற புகழ்பெற்ற கட்டிடக் கலைஞர். இக்கட்டிட வேலை 1506 முதல் 120 ஆண்டுகள் வரை நடைபெற்றது. இந்த ஆலயத்திற்குள் 43,000 பேர் ஒரே நேரத்தில் வழிபடலாம். இப்படம் புனித ஆண்டில் செய்த சீர்திருத்தங்களுக்குமுன் எடுக்கப்பெற்றது.

அடக்கம் செய்யப் பெற்றுள்ளன. அந்தச் சமாதிகளுக்கு அருகே தீ எரிந்துகொண்டிருப்பதும் 24 மணி நேரமும் பூசை நடப்பதும் இங்குச் சிறப்பான நிகழ்ச்சிகள். கடவுளின் அருளால்போப் ஆண்டவர்களின் உடல்கள் அழிவதில்லை என்று கத்தோலிக்கர் நம்புகின்றனர்.

செயின்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தில் வழிபடுவதற்கெனத் தனித்தனியாக 27 இடங்கள் உள்ளன. பல மொழிகளில் அங்கு விவிலிய நூல் படிக்கப்படுகிறது.

செயின்ட் பீட்டர்ஸ் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் பாதிரிகள் சென்று பாவ மன்னிப்புக் கேட்பர்.

செயின்ட் பீட்டர்ஸ் சர்ச்சில்(Treasury and Sacristy) என்ற பகுதியிருக்கிறது. அங்கே இந்தக் கோயிலைச் சேர்ந்த நகைகளும், தங்கத்தால் செய்யப்பட்ட சிலுவையும் வைக்கப்பட்டிருக்கின்றன. உலகத்திலுள்ள எல்லா வகையான நாணயங்களும் பதக்கங்களும் வத்திக்கானில் உள்ளன. இவற்றை நன்ருகப் பார்ப்பதற்குப் பல நாட்கள் ஆகுமாம்.

## 10. வத்திக்கான் நகர்

வத்திக்கான் நகரில் வாழ்வோரில் பெரும்பாலோர் பாதிரிகள். இவர்கள் தங்குவதற்கு ஒரு ‘குரு மடம்’ இருக்கிறது. வத்திக்கானில் பணிமக்களாக உள்ள ஏனையோர் மட்டுமே குடும்பம் உள்ளவர்களாக இருப்பார்கள்.

பொறியியல் வல்லார், மின்சார வேலை பார்ப்பவர்கள் முதலிய தொழிலாளர் 70 பேர் வத்திக்கானில் வேலை பார்க்கிருர்கள். இவர்களுடைய வேலை, செயின்ட் பீட்டர்ஸ் சர்ச்சின் வட்டவடிவமான கூண்டின்மீது ஏறுதல், அதைப் பழுது பார்த்தல், அங்குள்ள சன்னல்களை மூடுவதும்

திறப்பதும், திருவிழாக் காலங்களில் அங்கே ஆயிரக் கணக்கான விளக்குகளை அலங்காரமாகப் பொருத்துதல் முதலியன.

வத்திக்கான் எல்லைக்குள் பிறந்தவர்களுக்கு அங்கேயே எப்போதும் வாழ்வதற்கு எந்தவிதமான தடையும் கிடையாது. மற்றவர்கள் அங்கேயே நிலையாகத் தங்குவதற்கு ஆறு மாதத்திற்கு ஒரு தடவை தங்களுடைய குடியிருப்பு இசைவுச் சீட்டைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். வத்திக்கான் குடி உரிமை பெற்ற பெண்கள்— அவர்கள் கணவர்களும் வத்திக்கானில் வேலை பார்ப்பவர்களாக இருந்தாலன்றி—தங்களுடைய குடி உரிமையைத் தங்களுக்குத் திருமணமானதும் இழந்து விடுவர். குடும்பத்தோடு வத்திக்கானில் வாழ்பவர், பேறு பெற்றவர்கள். ஏன் எனின் அங்கு வீட்டு வாடகை மிகக் குறைவு. ஆனால் வீட்டு வசதியில்லாதவர்கள் பலர் இருக்கின்றனர். அந்த நகரத்தில் ஆடவர் பெண்டிர் தொகை ஒன்பதுக்கு ஒன்று.

வத்திக்கான் தெருக்களில் தெருவின் பெயர் தாங்கிய பலகைக்கு அருகே மற்றொரு அறிவிப்பு இருக்கும். அதில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருக்கும் :

> ஆண்டவனின் இல்லம் அமைந்த நகரம் இது. இயேசுகிறித்துவின் கொள்கைகளுக்கேற்ப இந்த நகரில் வாழும் பெண்களும், இந்த நகருக்கு வருகை புரியும் பெண்களும் உடல் முழுவதையும் கணைக் காலுக்குக் கீழேயும் போர்த்திக்கொள்ளவேண்டும். மரியாதையான முறையிலும் ஒழுக்கத்திற்கு ஊறு ஏற்படாத வகையிலும் உடை உடுத்திக்கொள்ள வேண்டும்.

வத்திக்கான் என்பதற்கு கடவுளிடமிருந்து வரும் வாழ்த்துச் செய்தியைப் பரப்பும் இடம் என்று பொருள் படும். எனவே, இப்புனித மண்ணில் இத்தகு கட்டுப்பாடு இருப்பது இயற்கையே. இரவில் குறிப்பிட்ட நேரத் திற்குப் பின்னர் யாரும் வத்திக்கான் நகரைவிட்டு வெளியே செல்ல இயலாது. உள்ளே வருவதும் தடை செய்யப் பட்டிருக்கிறது.

250 கார்கள் மட்டும் வந்திக்கானில் இருந்தாலும், வந்திக்கானில் லைசென்ஸ் வாங்கிய கார்கள் 3,000 உள்ளன. இந்தக் கார்கள் இத்தாலியில்தான் ஓடிக் கொண்டிருக்கின்றன. இத்தாலியில் ஓடும் கார்களுக்கு வத்திக்கானில் லைசென்ஸ் வாங்குவதற்குக் காரணம் வத்திக்கான் லைசென்ஸ் உள்ள கார் ஓட்டுபவர்களை இத்தாலியப் போலீசார் கைது செய்வதில்லை. எச்சரிக்கை செய்து அபராதம் மட்டும் வசூலிப்பதுண்டு.

## 11. பிற நிறுவனங்கள்

### கல்வி நிலையங்கள்

கலையின் உறைவிடமாக உள்ள வத்திக்கான் கல்வியிற் சிறந்த நகரமாகவும் இருந்து வருகிறது.

பத்திரிகைகள், வானொலி பற்றிய கல்விக்காக ஒரு பல்கலைக் கழகம், பிரெஞ்சு, ஆங்கிலம், இத்தாலிய மொழி களில் விஞ்ஞானப் பாடங்களையும் கற்றுக் கொடுக்கும் கல்வி நிலையங்கள், இலத்தீன் மொழி கற்பிக்கும் கல்லூரி, பாதிரிமார் திருமறை நூல் கல்வி பயிலும் பல்கலைக் கழகம் ஆகியவை வத்திக்கானில் உள்ளன.

வத்திக்கானில் உரையாடுவதற்கு இத்தாலிய மொழியையும், வெளிநாட்டு அரசாங்கங்களுக்குக் கடிதம் எழுதப் பிரெஞ்சு மொழியையும், சடங்குகளுக்கு இலத்தீன் மொழியையும் பயன்படுத்துகின்றனர். 1959 அக்டோபர் 11-இல் இத்தாலியில் அமெரிக்கர் நடத்தும் ஒரு கல்லூரியில் போப் ஜான் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினர். போப் ஆண்டவர் ஒருவர் ஆங்கிலத்தில் பேசியது இதுவே முதல் தடவை.


இங்கே 1934-இல், 'வீரமா முனிவர் கழகம்' என்னும் தமிழ் மன்றத்தைத் தனிநாயக அடிகளும் இன்னும் எட்டுப் பாதிரிமார்களும் தொடங்கியுள்ளனர். 1939 வரை இக்கழகத்தினர் வத்திக்கான் வானொலி நிலயத்திலிருந்து 'தேமதுரத் தமிழோசை உலகெலாம்' பரப்பி வந்தனர்.

### வானொலி நிலயம்

போப் ஆண்டவரை 'ஏழு மலையான்' என்று போற்றினும் தகும். ஏனெனில், அவர் வாழும் ரோமாபுரி ஏழு குன்றுகளுக்கிடையே உள்ள நகரம். அந்தக் குன்றுகளில் ஒன்ருன CASTAL GANDOLFO என்னும் சிற்றூரில் போப் ஆண்டவரின் கோடைக்கால மாளிகை இருக்கிறது.

புனித நகரத்தின் மிக உயர்ந்த இடத்தில் ஒரு வானொலி நிலயம் இருக்கிறது. இங்கு நாள்தோறும் அல்லும் பகலும் 30 மொழிகளில் ஒலி பரப்புக்கள் நடைபெறுகின்றன. கிறிஸ்தவ மதத்தின் கொள்கைகளைப் பரப்பவும், போப் ஆண்டவருடைய குரலை நெடுந்தொலைவிலுள்ள மக்கள் கேட்கவும் இந்த நிலயம் பயன்படுகிறது. உலகெங்கும் பணி புரியும் பாதிரிமார்களும் ஏனையோரும் இந்த நிலயத்தின் வாயிலாகவே போப் ஆண்டவர் நல்கும்

அறிவுரைகளைக் கேட்டு வருகின்றனர். செயின்ட் பீட்டர்ஸ் சர்ச்சின் புகழ்பெற்ற மணியின் ஒலியையும் இந்த வானொலி நிலையத்தின் வாயிலாகவே எங்கும் எல்லோரும் கேட்க இயலுகிறது.



போப் ஆண்டவர் பேசுவதற்காக வத்திக்கானில் ஒரு வானொலி நிலையம் இருக்கிறது. இதை (1931-இல்) அமைத்துக் கொடுத்தவர் வானொலியைக் கண்டுபிடித்த பேரறிஞர் மார்கோனி.

இந்த நிலையத்து ஒலி பரப்புக்களை இந்தியாவில் நள்ளிரவில் கேட்க வேண்டியிருப்பதால் அவற்றைக் கேட்பதற்கென மைலாப்பூரில் ஒரு அலுவலர் நியமிக்கப் பெற்றிருக்கிறார்.

தொலைக் காட்சி நிலையமும் வத்திக்கானில் இருக்கிறது.

### அச்சகங்கள்

இந்தச் சின்னஞ்சிறு நகரில் பல அச்சகங்கள் உள்ளன. இத்தாலி, அராபிக், சமஸ்கிருதம், ஹீப்ரு, கிரேக்கம் போன்ற பல மொழிகளில் இங்கு நூல்கள் அச்சிடப்படுகின்றன.

பல பத்திரிகைகள் இங்கிருந்து இத்தாலியன், இலத்தீன் போன்ற மொழிகளில் வெளிவருகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது, Osservatore Romano (The Roman Observer) என்ற நாளிதழ்.

### தோட்டங்கள்

32 ஏக்கர் பரப்புக்கு வத்திக்கானில் தோட்டங்கள் உள்ளன. உலகத்திலுள்ள புகழ் பெற்ற பூஞ்சோலைகளோடு வைத்து எண்ணத்தக்கவை இவை. செடி கொடிகள், பச்சைப்பசேலென்ற புல்வெளிகள், வண்ண வண்ணமான பூக்கள், பெரிய நீர் ஊற்றுக்கள், இடையிடையே பழங்காலத்துச் சாலைகள்—இத்தகைய காட்சியை இத்தோட்டங்கள் தருகின்றன.

### தொழிற்சாலை

உலகெங்கும் உள்ள கத்தோலிக்கக் கோயில்களை அலங்கரிக்க உதவும் துணிகளைச் செய்வதற்கு ஒரு தொழிற்சாலை இருக்கிறது. இங்கே வேலை பார்க்கும் கைதேர்ந்த தொழிலாளர்கள் வீறு மிக்கதாயும் வனப்பு மிக்கதாயும் உள்ள சிலுவைகளையும்—பதக்கங்களையும் செய்கின்றனர்.

### பலசரக்குக் கடை

வத்திக்கான் நகரில் ஒரு பலசரக்குக்கடை இருக்கிறது. அதற்கு 'அன்னோனா' என்று பெயர். இந்தக் கடையில்

அமெரிக்கச் சிகிரெட்டுகளைப் பாதிவிலைக்குக் கொடுக்கிறார்களாம். உலகெங்கும் உற்பத்தியாகும் எல்லா வகைப் பொருள்களும் இங்கே கிடைக்கின்றன. சுங்கவரி இல்லாததால் மருந்துகளும் பெட்ரோலும் பிறவும் மிக மலிவாக விற்கப்படுகின்றன. வத்திக்கானில் குடியிருப்பவர்கள் மட்டும்தான் இந்தக் கடையின் வாடிக்கைக்காரர்களாக இருக்கலாம். குழந்தைகளுக்கு அன்பளிப்பாகப் பால் வழங்கும் நிறுவனம் ஒன்றும் வத்திக்கானில் இருக்கிறது.

வத்திக்கானில் நடைபெறும் பெரிய வியாபாரம் பழைய போப்புகளின் சிறிய உருவப் படங்கள் அமைந்த அட்டைகளை விற்பது; வத்திக்கான் நகரைப் பற்றிய படப் புத்தகங்கள் வழிகாட்டி நூல்கள், கைவினைஞர் செய்யும் அழகுப் பொருள்கள் விற்பது ஆகியவையே.

**ரயில் நிலையம்**

வத்திக்கானில் ஒரு ரயில் நிலையம் இருக்கிறது. இது 1931-இல் இத்தாலிய அரசாங்கத்தாரால் அமைத்துக் கொடுக்கப்பட்டது. அதற்கு அப்போது 40 இலட்சம் ரூபாய் செலவாயிற்றும். அரசர்கள் வந்து தங்குவதற்கான ஒரு விடுதியும் இந்த ரயில் நிலையத்தில் இருக்கிறது. ஆனால், இதுவரையில் இங்கே யாருமே தங்கியதில்லை. இந்த ரயில் நிலையத்தில் பிரயாணிகள் ஏறிச் செல்லும் வண்டி எதுவும் செல்வதில்லை.

வத்திக்கான் ரயில் பாதையின் நீளம் 30 கெஜம்தான். இந்தத் தொலைவுக்கு இத்தாலியிலிருந்து வத்திக்கானுக்குள் ரயில் பாதை போடப்பட்டிருக்கிறது. வத்திக்கான் சுதந்தர நாடாக இருப்பதால் வெளி நாட்டிலிருந்து இங்கு வருகிற பொருள்களைச் சுங்கச் சோதனை செய்யாமல் ரயிலிலேயே அனுப்பிவிடுவதற்காக இந்த ரயில் பாதை ஏற்பட்டிருக்கிறது.

## சிறைச்சாலை


வத்திக்கானில் ஒரு சிறைச்சாலை இருக்கிறது. கடந்த 50 ஆண்டுகளில் இந்தச் சிறையில் மொத்தம் 12 பேர்களே அடைக்கப்பட்டிருக்கிறார்களாம். பிற நாடுகளைப்போல, கைதிகளைக் கொடுமைப்படுத்துவது ஆண்டவன் பெயரால் ஆட்சி நடத்தும் வத்திக்கானுக்கு அடுக்காது அல்லவா? ஆகையால், போப் ஆண்டவர் இந்தச் சிறையில் கைதிகளைத் துன்புறுத்தக்கூடிய எந்த வகையான கருவியும் இருக்கக்கூடாது என்று ஆணையிட்டிருக்கிறார். சுகாதார வசதி; இன்பமாய்ப் படுத்துறங்க நல்ல படுக்கை; ஓடியாடி விளையாட மைதானம் முதலியனவும் இந்தச் சிறையில் உண்டு.

## விஞ்ஞான ஆராய்ச்சி

விஞ்ஞான ஆராய்ச்சிக்கு ஏற்ற இடம் வத்திக்கான். விஞ்ஞானத்தின் உட்பகுதிகள் எவை பற்றியும் ஆராய அங்கு வாய்ப்பு இருக்கிறது. இவற்றிற்காக, போப் ஆண்டவர் செலவு செய்யும் தொகை ஆண்டுதோறும் கூடிக்கொண்டிருக்கிறது. மிகச் சிறந்த விஞ்ஞானிகள் பலரை வத்திக்கான் வழங்கியுள்ளது.

வத்திக்கானிலுள்ள வானிலை ஆராய்ச்சி நிலையம் மலை மீது அமைந்திருக்கிறது. நட்சத்திரங்களைப்பற்றிய அரிய செய்திகள் இங்கே கண்டுபிடிக்கப்பட்டுள. விண்வெளி ஆராய்ச்சிக்குரிய தொலைநோக்காடியும் (Telescope) வானத்திலுள்ள சிறு பொருள்களையும் எளிதில் காண உதவும் பூதக் கண்ணாடிகளும் ஏனைய அரும் பொருள்களும் இங்கு உள்ளன. அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் உள்ள தலைசிறந்த கத்தோலிக்கப் பல்கலைக் கழகங்களில் வானிலை ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பவர் முதிர்ந்த வயதில் இங்குவந்து பணிபுரிகின்றனர்.

மதமும் விஞ்ஞானமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை என்ற கருத்து வத்திக்கானில் நிலவவில்லை. 1603 முதலே அங்கு விஞ்ஞானத்துறை இருந்து வருகிறது. 1936 முதல் விஞ்ஞானிகளின் குழு ஏற்படுத்தப்பட்டிருக்



தாவர ஆராய்ச்சியும் வத்திக்கானில் நடைபெறுகிறது. உலகெங்குமிருந்து வரவழைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான செடி கொடிகள் இந்தப் பெட்டிக்குள் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

கிறது. இதற்கு The Pontifical Academy of Science என்று பெயர். இக்குழுவினர் பௌதிக சாத்திரம், கணித இயல் ஆகிய இரண்டுக்குமே சிறப்பிடம் தருகின்றனர். மொத்தம் 73 உறுப்பினர் மட்டுமே இக்குழுவில் இருக்கலாம்; கத்தோலிக்கரல்லாதாரும் இடம் பெறலாம்.

### நூல் நிலையம்

வத்திக்கான் நூல் நிலையம் உலகின் பெரிய நூல் நிலையங்களில் ஒன்று. முதலில் சுவடி நிலையமாகத்தான் இது

தொடங்கப் பெற்றது. பிற்காலத்தில், அன்பளிப்பாகக் கிடைத்ததும் விலைக்கு வாங்கியதுமாக அச்சு நூல்கள் பெருகியுள்ளன.

சுவடிகளைப் பற்றிய ஆராய்ச்சி இங்கே பெரிய அளவில் நடைபெறுகிறது. அறுபதாயிரத்திற்கு மேற்பட்ட சுவடிகள் இங்குள்ளன. கரையான், அந்து முதலியன கடித்துக் கெட்டுப்போன நூல்களை மீண்டும் நல்ல நிலையில் கொண்டுவருவதற்கான செப்பனிடும் வேலைகளும் நடைபெறுகின்றன.

அச்சிட்ட நூல்களின் எண்ணிக்கை பத்து இலட்சம். அருமையான நூல் நிலையங்கள் வெளியிடங்களில் கிடைத்தால் அவற்றையும் இலட்சக் கணக்கில் பணம் கொடுத்து வாங்கி இந்த நூல் நிலையத்தில் சேர்த்துக் கொள்ளுகிறார்கள்.

வரலாற்றுத் தொடர்புடைய நிகழ்ச்சிகளைப்பற்றிய கடிதங்கள், உடன்பாடுகள், ஒப்பந்தங்கள், போப்புகளின் ஆணைகள், ஒவ்வொரு நாட்டிலும் கத்தோலிக்கச் சமயம் பரவிய வரலாறு பற்றி நூறாயிரக் கணக்கில் ஆதாரங்கள் இங்கு உள்ளன.

வத்திக்கான் நூல் நிலையத்தின் அமைப்பும் சூழ்நிலையும்கூட மாறிவிட்டது. உலகத்திலுள்ள புத்தம் புதிய நூல் நிலையங்களைப்போலப் பல மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. பெண்களும் இந்த நூல் நிலையத்தைப் பயன்படுத்தலாம் என்று போப் ஆணையிட்டிருக்கிறார்.

உலகமெங்குமிருந்து ஆராய்ச்சியாளர்கள் வந்து இந்நூல் நிலையத்தைப் பயன்படுத்திக்கொள்ளப் போப் இசைந்துள்ளார். கத்தோலிக்கக் கோயில்களில் பாடப்படும் இசைப் பாடல்களை முதலில் அமைத்தவரின் கையெழுத்துப்

படிகளும், உலகத்திலேயே பெரிய அளவில் அச்சிடப் பட்டுள்ள விவிலிய நூலும், உள்ளங்கைக்குள் மறைத்து வைத்துக்கொள்ளக்கூடிய அளவில் அமைந்த சின்னஞ் சிறு விவிலிய நூலும் கத்தோலிக்க மதத்தினர்—தமிழ் உட்படப் பல மொழிகளில் முதலில் அச்சிட்ட நூல்களும் இங்கே காணவேண்டியவை.

## 12. கலைச் செல்வங்கள்

ஹிந்துக் கோவில்களைப்போலவே, கிறித்தவ ஆலயங் களும் கலையின் இருப்பிடமாக உள்ளன.

ஐரோப்பிய நாடுகளில் இயேசு கிறிஸ்துவின் சிலைகளை யும், உருவங்களையும் செய்துதான் கலை பெருவளர்ச்சி அடைந்தது. அதனால் இன்றும் கத்தோலிக்கச் சமயத் துடன் இத்தகைய கலைகளும் ஓங்கி வளர்ந்தும் வாழ்ந்தும் வருகின்றன. இத்தகைய கலைப் பொருள்களைப் பேணி வைப்பதில் கத்தோலிக்கச் சமயத்தினர் கண்ணுங் கருத்து மாக இருந்து வருகின்றனர்.

போப் ஆண்டவரின் அரண்மனையில் எவ்வளவோ விலை உயர்ந்த கலைப்பொருள்கள் ஏராளமாக உள்ளன. அவைகள் பல காட்சிச் சாலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மிகப் பழமையான கலைச்செல்வங்கள் பல நாட்டு அரசர் களிடமிருந்து பெறப்பட்டவை.

கிரேக்க கலைச்செல்வங்கள்தான் இங்கு ஏராளமாக உள்ளன. இந்த மண்டபங்களில் சில அவற்றின் கட்டிட வனப்புக்காகவே காணத்தக்கவை. ஆர்ச் வளைவுகள், தொழில்பேட்டை அமைப்புடன்கூடிய மண்டபங்கள், ஓங்கி உயர்ந்த தூண்கள், செதுக்கு வேலையில் சிறந்த

[stamp]

தூண்கள் ஆகியவையும் காட்சிப் பொருள்களைப் போலவே முக்கியமானவை. கிரேக்கர்களின் அரிய படைப்புக்களான மனித உருவப் படங்களும், வெள்ளையிலும் பல வண்ணங்களிலும், பளிங்கில் தீட்டப்பட்ட உயிரினங்




தேவாலயத்தின் பொன்முகடு. பல நிறப் பூக்கள் உள்ள இந்தக் கல் 2,000 ஆண்டுக்கு முற் பட்டது. நுண்ணிய வேலைப்பாடுகளுடன் கூடியது. இதுபோன்ற கலைச் செல்வங்கள் நிறைந்தது வத்திக்கான்.

களின் வடிவங்களும், ரபியேல் போன்ற இத்தாலிய மேதைகள் வரைந்த 463 ஓவியங்களும் கண்டார் வியக்கும் கலைப் பொருள்களாக உள்ளன.

18 அடி உயரமுள்ள சிலைகளையும், பல அரசர்கள் அன்பளித்த அழகுப் பொருள்களையும் இத்தாலியின் தலை சிறந்த ஓவியர்களும் கலைஞர்களும் செய்துள்ள அழியாப்

பெருமையுடைய அரிய படைப்புக்களையும் இங்கே காணலாம்.



விலையுயர்ந்த பலவகையான மணிகள், கற்கள் ஆகியவை வத்திக்கானில் கங்கு கரையின்று உள்ளன. இவ்வாறு 28,000 வகையான கற்கள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றையும் தனித்தனியே சிறு அறைகளுடைய மரப்பெட்டியில் பேணி வைத்திருக்கிறார்கள்.

வத்திக்கான் நாடு முழுதும் நடந்து செல்லப் பத்து நிமிடம் போதியதாகும். ஆனால், அங்குள்ள கலைச் செல்வங்களைக் காண நம்முடைய ஆயுட்காலம்கூடப் போதியதாகாது.